பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 09 2024 7 15
வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. குஜராத் மாநிலத்தில் நீர் சேகரிப்பு திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

2. இந்தியா – சிங்கப்பூர் இடையே சுகாதாரம் மற்றும் மருத்துவம், கல்வி, திறன்மேம்பாடு, டிஜிட்டல் தொழில்நுட்பம், செமிகண்டக்டர் உற்பத்தி ஆகியவற்றில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.

3. ஆந்திரா, தெலங்கானா மாநிலத்தில் மழை சேதம் குறித்து முழுமையான ஆய்வுக்குப் பின் மத்திய அரசு உதவி வழங்கும் என்று வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

4. விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட்டங்கள் நாளை தொடங்குகின்றன.

5. ஃபிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - கலியந்தா பூனச்சா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி குஜராத் மாநிலம் சூரத்தில் நீர் சேகரிப்பு திட்டத்தை காணொலி காட்சி வாயிலாக இன்று தொடங்கி வைக்கிறார்.

குஜராத் அரசின் நீர் சேகரிப்பு முயற்சியின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு மத்திய நீர்வள அமைச்சகம் அம்மாநில அரசுடன் இணைந்து குஜராத்தில் “நீர் சேகரிப்பு, மக்கள் பங்கேற்பு” என்ற முன்முயற்சியை தொடங்குகிறது.

இத்திட்டத்தின்கீழ் அம்மாநிலம் முழுவதும் சுமார் 24 ஆயிரத்து 800 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் கட்டப்படுகின்றன.

<<<<>>>>

கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநில மக்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களுக்கு மத்திய நிதி அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், காப்பீட்டுத் தொகையை மக்கள் சிரமமின்றி எளிதில் பெறுவதற்கு ஏதுவாக சிறப்பு முகாம்கள் நடத்துமாறு இந்நிறுவனங்களை கேட்டுக்கொண்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் தொடர்புகொள்ள வேண்டிய அதிகாரியின் தொடர்பு எண்ணை விளம்பரப்படுத்த வேண்டும் எனவும் காப்பீட்டு நிறுவனங்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் நிவாரணத்தை விரைந்து வழங்க மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆந்திர மாநிலத்தில் பெய்த கனமழையால் ஒன்று புள்ளி 8 லட்சம் ஹெக்டேர் பயிர்கள் சேதமடைந்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களுக்கு வெள்ள பாதிப்புகள் குறித்து கண்டறிய இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், கனமழையல் 2 லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

முழுமையான ஆய்வுக்குப் பின் அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என தெரிவித்தார்.

தேசிய பேரிடர் மீட்பு படையினர் மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் இதில் ஈடுபட்டுள்ளதாகவும், மலர்ச்செடிகள், மற்றும் மஞ்சள் பயிர்கள் அதிகமான அளவில் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஆந்திர மாநிலம் விஜயவாடா, ஜக்கம்புடி பால் பண்ணை உள்ளிட்ட பகுதிகளை ஆய்வு செய்த திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

இன்று தெலங்கானா மாநிலத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ்சிங் சௌஹான் ஆய்வு செய்ய உள்ளார்.

<<<<>>>>

இந்தியா – சிங்கப்பூர் இடையே சுகாதாரம் மற்றும் மருத்துவம், கல்வி, திறன்மேம்பாடு, டிஜிட்டல் தொழில்நுட்பம், செமிகண்டக்டர் உற்பத்தி ஆகியவற்றில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி - சிங்கப்பூர் பிரதமர் திரு. லாரன்ஸ் வோங்க் இடையேயான பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுகளுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, வளரும் நாடுகளுக்கு சிங்கப்பூர் உத்வேகம் அளிக்கும் நாடாக திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

தமது புருனே, சிங்கப்பூர் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றிரவு அவர் புதுதில்லி திரும்பினார்.

<<<<>>>>

விநாயகர் சதுர்த்தி விழா நாடு முழுவதும் நாளை முதல் 18ஆம் தேதி வரை கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி நாடு முழுவதும் கோயில்களில் சிறப்பு வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விநாயகர் சிலை ஊர்வலமும் நடைபெற உள்ளது.

<<<<>>>>

தேசிய மனித உரிமைகள் ஆணையம் சார்பில் சுகாதார சேவைகள் தொடர்பான தேசிய மாநாடு இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

சுகாதாரத்திற்கான உலகளாவிய அனுகுமுறை, டிஜிட்டர் தீர்வுகள் என்ற தலைப்பில் இம்மாநாடு நடைபெற உள்ளது.

மருத்துவர்கள், அரசு அதிகாரிகள், முன்னணி வல்லுநர்கள், சுகாதார நிபுணர்கள் ஆகியோரை ஒருங்கிணைப்பதை இம்மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

கிராமப்புற தொலைதூர பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதற்கான வழிமுறை குறித்து இம்மாநாட்டில் ஆராயப்பட உள்ளது.

நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி.கே. பால் இம்மாநாட்டை தொடங்கி வைக்கிறார்.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக செயலாளர் திரு. அபூர்வசந்திரா சிறப்புரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

மாணவர்களை நேர்மையானவர்களாகவும், சிந்தனை மிக்கவர்களாகவும்

ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஆசிரியர் தினத்தையொட்டி புதுதில்லியில் நேற்று தேசிய நல்லாசிரியர் விருதுகளை அவர் வழங்கிப் பேசினார்.

மாணவர்கள் தொழில்முனைவோராக திகழும் வகையில் அவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களின் இயல்பான திறமையைக் கண்டறிந்து அதை வெளிக்கொணர்வது ஆசிரியர்களின் கடமை என்று அவர் கூறினார்.

பெண்கள் மீதான கண்ணியம் வார்த்தைகளால் மட்டுமல்லாமல் நடைமுறையிலும் கடைபிடிக்கும் வகையில் அறிவுறுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்ற குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் கூற்றை சுட்டிக்காட்டினார்.

மாணவர்களை ஊக்குவிப்பதன் மூலம் ஆசிரியர்கள் நமது நாட்டை உலகின் சிறந்த அறிவுசார் மையமாக திகழச் செய்வார்கள் என்று திருமதி திரௌபதி முர்மு நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு இம்மாதம் 30ஆம் தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

இதுகுறித்து கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறந்த மாணவர்கள் 8ஆம் வகுப்புக்கு பிறகு இடைநிற்றல் இல்லாமல் தொடர்ந்து 12ஆம் வகுப்பு வரை கல்வியைத் தொடரும் வகையில் உதவித்தொகை வழங்கப்படுவதாக கூறியுள்ளது.

மாநில மற்றும் யூனியன்பிரதேச அரசுகள் நடத்தும் தகுதித் தேர்வின் மூலம் ஆண்டுதோறும் 9ஆம் வகுப்பு படிக்கும் ஒரு லட்சம் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதாக அது தெரிவித்துள்ளது.

மாணவர்களின் கல்வித் திறனைப் பொருத்து 10ஆம் வகுப்பில் இருந்து 12ஆம் வகுப்பு வரை அந்த உதவித்தொகை புதுப்பிக்கப்படுவதாக கூறியுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் இத்திட்டத்திற்கு தகுதிவாய்ந்த மாணவருக்கு ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதாகவும் மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

வணிக நிலக்கரி சுரங்கங்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை மூன்று நிறுவனங்களுக்கு நிலக்கரி அமைச்சகம் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகம், என்.எல்.சி. இந்தியா நிறுவனம், குஜராத் கனிம மேம்பாட்டுக் கழக நிறுவனம் ஆகியவற்றுக்கு இந்த ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆண்டுக்கு 2 ஆயிரத்து 991 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 40 ஆயிரத்து 560 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 95 நிலக்கரி சுரங்கங்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக நிலக்கரி அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

நிலக்கரி உற்பத்தி அடுத்த 10 ஆண்டுகளுக்குள் 500 மில்லியன் டன் அளவாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய எஃகு சங்கத்தின் மாநாட்டில் உரையாற்றிய அவர், அதிக உற்பத்தி திறன் மற்றும் உயர் தரத்துடன் கூடிய எஃகு உற்பத்தியாளராக இந்தியா திகழ்வதற்கு வழிவகைகளைக் கண்டறியுமாறு தொழில்துறையினரை அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் செயல்திறனை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துமாறு அவர் வலியுறுத்தினார்.

எஃகு உற்பத்தியில் இந்தியாவை சிறப்பாக வணிகப்படுத்தியதற்காக அத்துறையினரை அவர் பாராட்டினார்.

இது சுயசார்பு இந்தியாவுக்கான முன் உதாரணம் என்று திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பாரீஸ் பாராலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்று தாயகம் திரும்பிய வீரர்களுக்கு பாராட்டு விழா நேற்று நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பங்கேற்று வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் துணை ஊழியர்களை பாராட்டினார்.

பதக்கம் வென்ற தீப்தி ஜீவன்ஜி, ரவி ரங்கோலி, ரக்ஷிதா ராஜு, கஞ்சன் லகானி, சாக்ஷி கஸானா ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டனர்.

<<<<>>>>

ஃபிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - கலியந்தா பூனச்சா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிச் சுற்றில் இந்த இணை 7-6, 7-6 என்ற செட் கணக்கில் பெருவின் **Conner Huertas – Arklon Huertas** இணையை வென்றது.

<<<<>>>>

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – அர்ஜென்டினாவின் **Guidr Andreozi** இணை அரை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிச் சுற்றில் இந்த இணை, 7-6, 7-6 என்ற செட் கணக்கில் பல்கேரியாவின் **Alexander Donski –** போர்ச்சுகலின் **Tiago Pereita** இணையை வென்றது.

<<<<>>>>

பாரீஸ் பாராலிம்பிக் போட்டியின் ஆடவர் ஜூடோ பிரிவில் இந்தியாவின் கபில் பார்மர் வெண்கலப் பதக்கம் வென்றார்.

60 கிலோ எடைப்பிரிவில் அவர், பிரேசிலின் **Elielton de Oliveira**-ஐ 33 வினாடிகளில் வென்றார்.

இதன் மூலம் பாராலிம்பிக் போட்டி வரலாற்றில் முதல் முறையாக இந்தியா பதக்கம் வென்றுள்ளது.

மகளிர் 100 மீட்டர் ஓட்டப் பிரிவின் இறுதிச்சுற்றில் இந்தியாவின் சிம்ரன் ஷர்மா தோல்வியடைந்தார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 5 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 14ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற உள்ள ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியின் இறுதிச் சுற்றில் இந்தியாவின் தீபேஷ் குமார் பங்கேற்கிறார். மகளிர் பிரிவில் பி.ஏ. சௌத்ரி பங்கேற்கிறார்.

ஆடவர் உயரம் தாண்டுதல் இறுதிப் போட்டியில் பிரவீன் குமாரும், மகளிர் 67 கிலோ எடைப்பிரிவு வலுதூக்கும் போட்டியின் இறுதிச்சுற்றில் கஸ்தூரி ராஜாமணியும் இன்று பங்கேற்கின்றனர்.

**<<<<The End>>>>**